# புனித வார கையேடு 2020

## குடும்பம் மற்றும் வீட்டிலுள்ளோர்களுக்காக

### (கோவிட்-19 தொற்றுநோயின் காலத்தில்)

Est. 1955
DIOCESE OF PENANG
MALAYSIA

குடும்பம் மற்றும் வீட்டிலுள்ளோர் திட்டமிட்ட நேரத்தில் கூடி செபிக்க வேண்டும்

தனியார் பயன்பாட்டிற்கு மட்டுமே

# கிறிஸ்துவின் உடலோடு ஒன்றித்திருங்கள்



நீங்கள் கிறிஸ்துவின் உடல்: ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள். அவ்வாறே திருச்சபையிலும் கடவுள் முதலாவது திருத்தூதர்களையும், இரண்டாவது இறைவாக்கினர்களையும், மூன்றாவது போதகர்களையும், பின்னர் வல்லசெயல் செய்வோர்களையும், அதன்பின் பிணி தீர்க்கும் அருள்கொடை பெற்றவர்கள், துணைநிற்பவர்கள், தலைமையேற்று நடத்துபவர்கள், பல்வகை பரவசப்பேச்சு பேசுகிறவர்கள் ஆகியோரையும் ஏற்படுத்தினார். *(1 கொரிந்தியர் 12: 27-28)*

# தெய்வீக இயேசுவுடன் ஒரு பயணம்

*அன்பு இயேசு ஆண்டவரே,*

இவ்வாரம் நாங்கள் உம்மோடு நெருக்கமாக இணைந்து உமது திருப்பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் மூழ்கி உம்மோடு பயணிக்கின்றோம், இங்கு ஒன்றுகூடியுள்ள நாங்கள், உம்மோடு ஆன்மீக ரீதியில் ஒன்றித்திருக்க எங்களுக்கு உதவி அருளும்.

சிறிய, ஆனால் அர்த்தமுள்ள வழிகளில் ஒருவருக்கொருவர் ஆசீர்வாதமாக இருக்க எங்களுக்கு உதவியருளும். ஆண்டவராகிய இயேசுவே, எங்கள் செயல்கள் பரிவுள்ளதாகவும் மென்மையானதாகவும் இருக்க, எங்கள் வார்த்தைகள் அறமுள்ளதாகவும் நியாயமற்றதாகவும் இருக்க, எங்கள் எண்ணங்கள் மனத்தாழ்மையும் மன்னிப்பும் கொண்டதாகவும் இருக்க, நாங்கள் ஒருவருக்கொருவர் அன்போடும் பொறுமையோடும் இருக்க பாடுபடவும் கற்றுத்தாரும்.

ஒருவருக்கொருவர் இடையே உள்ள ஒற்றுமையானது எங்கள் அன்பின் பரிசாகவும் மேலும் உலகத்தின் நன்மைக்காக நம்பிக்கையும் குணப்படுத்துதலையும் நாங்கள் ஒப்புக்கொடுக்கின்றோம். ஆமென்.

# புனித சனிக்கிழமை

DIOCESE OF PENANG
MALAYSIA
Est. 1955



# புனித சனிக்கிழமை

## திருஒளி கொண்டாட்டம்

† வீட்டை இருளாக்கி, ஒரு முக்கிய மெழுகுவர்த்தியை ஏற்றி மன்றாடுவோம்... †



# புனித சனிக்கிழமை

## திருஒளி கொண்டாட்டம்



**தலைவர்:**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, இந்த புனித இரவில், நீர் சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்துச் சென்றீர், உலகெங்கும் உள்ள உம் பிள்ளைகளை, உம் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நினைவுகூறவும், உமது வார்த்தையை கேட்கவும் உமது மறைப்பொருளை கொண்டாடவும் ஒன்றாக அழைக்கின்றீர். இந்த நம்பிக்கையில், உம் மரணத்தின் மீது கொண்ட வெற்றியில் நாங்களும் பங்குகொண்டு உம்மோடு என்றென்றும் இறைவனில் வாழ்வோம். உமது ஒளி எங்களில் புது நம்பிக்கையை தூண்டுவதாக. எங்கள் மனங்களை தூய்மைப்படுத்தி நித்திய ஒளியின் விழாவுக்கு கொண்டு சேர்க்கவும் ஆமென்.

# புனித சனிக்கிழமை

## திருஒளி கொண்டாட்டம

இப்போது நாம் ஒவ்வொருவரும் பிரதான மெழுகுவர்த்தியிலிருந்து நமது தனிப்பட்ட மெழுகுவவர்த்திகளை ஒளிரச்செய்து பின் வரும் செபத்தை இரு முறை மன்றாடுவோம்.



**ஒன்றாக:**

கிறிஸ்து எங்கள் ஒளி, எங்கள் உள்ளத்தில் ஒளிரும், இருள் வழியாக ஒளிரும்
கிறிஸ்து எங்கள் ஒளியாகும், இங்கு கூடியிருக்கும் உமது திருஅவைமீது, அவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் மீது ஒளிரும்.

# புனித சனிக்கிழமை

DIOCESE OF PENANG

## திருத்தூதர் தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 6: 3-11

திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சி மிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். இது நமக்குத் தெரியும். ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ? கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை. இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்: இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம். அவர் இறந்தார்: பாவத்தை ஒழிக்க ஒரே ஒருமுறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார்: அவர் கடவுளுக்காகவே வாழ்கிறார். அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள்: கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

**ஆண்டவரின் அருள்வாக்கு.** ***பதில்: இறைவனுக்கு நன்றி***

# புனித சனிக்கிழமை

Est. 1955
DIOCESE OF PENANG
MALAYSIA

## திருமுழுக்கு வாக்குறதிகளை புதுப்பித்தல

**நமது மெழுகுவர்த்தியின் புதிய ஒளியிலிருந்தும் மேலும் நமது உள்ளத்திலிருந்து இப்போது நமது நம்பிக்கையை அறிவிப்போம். (இந்த வேலையில் சிறப்பான முறையில் நமது புது முக தேர்வாளர்களை (RCIA) நினைவுக்கூறுவோம்)**

விண்ணகத்தையும் மண்ணகத்தையும், படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன். அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன். இவர் தூய ஆவியால் கருவுற்று, கன்னி மரியிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்ததுவின் அதிகாரத்தில் பாடுபட்டுச் சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.

விண்ணகத்துக்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப் பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.

தூய ஆவியாரை நம்புகிறேன். புனித, கத்தோலிக்க, திரு அவையை நம்புகிறேன். புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகின்றோம் பாவ மன்னிப்பை நம்புகின்றோம். உடலின் உயிர்ப்பை நம்புகின்றேன். நிலைவாழ்வை நம்புகின்றேன். ஆமென்.

# புனித சனிக்கிழமை

DIOCESE OF PENANG

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா (2)
ஆசீர்வதியும் என் நேச கர்த்தரே - 2
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும் - 2

1. கன்மலையைப் பிளந்து வனாந்தரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே (2)
பள்ளத்தாக்கிலும் மலைகளிலும் -2
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே -2

2. ஜீவத்தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தரே
ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுமே (2)
கனிதந்திட நான் செழித்தோங்கிட -2
கர்த்தரின் கரத்தால் நித்தம் கனம்பெற்றிட -2

3. இரட்சிப்பின் ஊற்றுகள் எந்தன் சபைதனிலே
எழும்பிட இந்த வேளை இரங்கிடுமே (2)
ஆத்ம பாரமும் பரிசுத்தமும் -2
ஆவலுடன் பெற்றிட வரம் தாருமே -2